


# எஸ். அகஸ்தியர்

## ஓர் இலக்கிய மூச்சு

**29.08.1926 - 08.12.1995**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

இலக்கிய உலகம்
ஈடு செய்ய முடியாத இழப்பாம் – எம்
எஸ். அகஸ்தியர் – அவர்தம்
பெரும் பயணத்தின் போது
தம் கண்ணீரை வெளியிட்ட
பொது அமைப்புக்களினதும்
கலை இலக்கியவாதிகளினதும்
கண்ணீர் பாமாலைகளையும்
தனிப்பட்ட பிரசுரங்கள் மூலம்
தெரிவித்த அனுதாபங்களையும்
அமரர் எஸ். அகஸ்தியர் அவர்களின்
பாதங்களைத் தொட்டு வைக்கின்றோம்.

– தமிழீழக் கலைஞர் ஒன்றியம் பிரான்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த மனிதனை
# எம் நெஞ்சில் சுமப்போம்.........

இடையறாது இயங்கிய
இலக்கிய பேரியக்கம்
இயக்கவியல் ஈய்ந்த
இனிய 'கருத்தாக்கம்'
மடை திறந்தாற் போல்
பாய்ந்து வந்த 'படைப்பாக்கம்'
இடையினில் தன்னை நிறுத்தி
ஓய்வெடுக்கச் சென்றதோ
ஓலங்கள் வேண்டாம்
'அகஸ்தியக் கருவூலங்கள்'
அருகிருந்து வழிகாட்டும்
மானுட நேயனுக்கு
மனைவியாய் வாழ்ந்த தாயே
கண்ணீர் துடைத்து கொஞ்சம்
நிமிர்ந்து நோக்குங்கள்
இங்கே இலக்கியப் பூக்கள் அல்லவா
உங்கள் இதய நாயகன் உறங்க
மஞ்சம் அமைத்துக் கொடுத்திருக்கின்றன
உங்கள் காதல் வாழ்வில்
மலர்ந்த நான்கு செல்வங்கள்
வெறும் வாரிசுகள் மட்டுமா?
ஒரு இலக்கிய விளை நிலத்தில்
விளைந்த முத்துக்கள் அல்லவா
ஒரு தலைமுறை எழுத்தாளனின்
இழப்பு உங்களுக்கு, எங்களுக்கு
மட்டுமா?
ஒரு தேசத்துக்கு!
ஒரு மொழிக்கு!
ஒரு புது உலகுக்கு!
அழுவதை நிறுத்தி
அந்த மாமனிதனை
எம் நெஞ்சில் சுமப்போம்!

– அருந்ததி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் எதிர்காலச் சிந்தனையில்.................

ஈழத்து தமிழ் இலக்கிய பரப்பில் 'கலை கலைக்காக' என்கின்ற கோஷங்கள் மலிந்து கொண்டிருந்த காலகட்டம் ஒன்று இருந்தது.

'எந்தப் புதிய விளைச்சலுக்கும் இடமளிக்காத இறுக்கமான இலக்கிய கட்டாந்தரையை கொத்தி கிளறுவதற்கு திராணியில்லாத கூர்மை மழுங்கிய ஆயுத முனைகளாய் பேனாக்கள் வலுவிழந்து கிடந்தன. காரண காரிய தொடர்பு இல்லாத 'தூய்மை' எழுத்துக்கள் வேஷங்கட்டி நின்றன.

'மக்கள் பிரக்ஞை' கொண்ட இலக்கிய கர்த்தாக்கள் மக்கள் கரங்களுக்குள்ளும் மனங்களுக்குள்ளும் வசப்படமுடியாத 'மாயாஜாலம்' காட்டும் அந்தர வாசிகளாக ஆகாயத்தில் தொங்கிக் கொண்டிருக்க வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலை..........!

இப்படியான! இருள் மூடிய நிலையிலிருந்து 'மக்கள் இலக்கியத்தின்' வேர்களுக்கு வெளிச்சம் இடுவது என்பது சாதாராணமானதொன்றல்ல. மேலை நாட்டு இலக்கிய பிரக்ஞையின்மை, போதிய இலக்கிய பயிற்சியின்மை, முதிர்ந்த அரசியல் ஞானமின்மை, அடிப்படையான வாழ்க்கை கல்வியின்மை என்கின்ற – இன்னும் இன்னும் பல போர்வைகளினால் மூடிக்கிடந்த மனித சமுதாயத்தின் 'திடீர் மாற்றம்' எப்படி சாத்தியமாகும்.

இங்குதான் 'இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் என்கின்ற வரலாற்றின் தவிர்கக முடியாத பிறப்பு ஒன்று காலத்தின் கட்டாயமாக நிகழ்ந்தது. இதன் பிறப்பின் வேர்களிலேயே அதன் விழுதுகளுக்கான வீரியம் தெரிந்தது.

இலக்கிய பரப்பில் பசுமை தெரிந்தது.

இலக்கிய பாழ்வெளிகள் எங்கும் பசுமை விரிப்புக்களாய் முட்களின் மீதும் கத்தி முனைகளின் மீதும் சிந்தனை தடம் பதித்து எழுத்தாணி கொண்டு மக்கள் அறிவுப் பரப்பினை உழுது வழிகாட்டிய சில நூறு மக்கள் இலக்கிய வாதிகளில் 'எஸ். அகஸ்தியரும்' ஒருவர். அரை நூற்றாண்டு கால தமிழ் இலக்கியம் அவரிடம் கடன்பட்டிருக்கிறது. தான் வாழுகின்ற காலகட்டத்திலேயே நிகழும் கொடுமைகளுக்காய் உடன் குரல் கொடுக்கும் தன்மை உலகெங்கிலுமே கலைஞர்களினால் தான் சாத்தியமாகிறது. முன்கூட்டியே வரவிருக்கும் தீங்குகள் பற்றி மக்களுக்கு எடுத்துச் சொல்வதற்கு அவனுக்கு தேவைப்படுவதெல்லாம் ஒரு ஊடகம்தான்.

இங்குதான் 'மார்க்ஸிஸம்' என்பது மாபெரும் வழிகாட்டியாய் உலக முற்போக்காளர் அறிவில் விரிகிறது.

இவ்வழியில் மார்க்ஸிஸத்தின் துணைகொண்டு ஒரு கவிஞனாய், இலக்கிய பரப்பில் கால் பதித்த எஸ். அகஸ்தியர் கடந்த ஐம்பது ஆண்டுகளாய் எழுதிக்குவித்ததோ ஏராளம்.

மார்க்ஸிஸ சிந்தனையில் இலக்கியம் இவரிடம் சிறப்பெடுத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது இறுதிக் காலத்தை பாரிஸ் மாநகரில் கழித்த இவர் இங்கும் தனது பணியினை தொடர்ந்தார். தனது வாழ்நாளில் கடைசி வினாடி வரை எழுதிக்கொண்டிருந்தவர் சிந்தனை இன்று நின்றுவிட்டது. ஆனால் அவர் சிந்தனையில் மலர்ந்தவைகள் காலத்தின் மகத்தான சேமிப்புக்கள்.

1986 புரட்டாதி 21ம் நாள் பாரிஸ் மாநகரில் ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் முதல் வெளியீடான 'மண்ணைத் தேடும் மனங்கள்' சிறுகதை தொகுப்பினை வெளியீடு செய்து வைத்து ஆற்றிய இலக்கிய உரையுடன் இங்கும் தன் பணியை தொடங்கியதோடு ஐரோப்பிய தமிழ் சந்ததியினருக்கு அறிமுகமானார் என்பது எம்மை பெருமைப்படவைக்கும் ஒன்று.

தீராமல் அவரை வாட்டிய நோய் ஒருபுறம், முதுமையின் இயல்பான தளர்வு ஒருபுறம், ஐரோப்பிய இயந்திரத்தின் சூனியம் ஒருபுறம் இத்தனைக்கும் அவர் கரங்கள் பேனாவை கீழே வைக்கவில்லை. நாட்டையும், மக்களையும், கலை இலக்கியத்தையும் வேறு வேறாக பார்க்காத அவரது சமுதாயச் சிந்தனையை அவர் திசை திருப்பவில்லை. வயது வித்தியாசமின்றி நட்பு பாராட்டும் அவர் தன்மை இலக்கிய கூட்டங்களில் முதிர்ந்த அறிவுடனும் துடிப்பான இளைஞனுக்குரிய சுறுப்சுறுப்புடனும் அவர் நிகழ்த்திய உரைகள் – இன்னும் இன்னும் வருகின்ற சந்ததிக்கும் அவர் எழுத்துக்கள் அணுகப்படவேண்டிய ஒன்றாக அரவணைத்துக் கொண்டிருக்கும்.

– **ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் ஒன்றியம்**

---

# 'அகஸ்தியர்' எழுத்தில் விழுதுவிட்ட இலக்கிய மானிடன்

மக்களிடம் கற்று மக்களிடம் வழங்கும் 'மானுட நேச எழுத்தாளர் வரிசையில் எங்கள் மூத்த எழுத்தாளர் அகஸ்தியர் அவர்களும் ஒருவர். இடதுசாரித் தத்துவத்தைக் கற்று ஆய்ந்து வரித்துக் கொண்ட இவரது எழுத்துக்களில் எல்லாம் தத்துவ ஒளி ஒடுக்கப்பட்ட மக்களுக்காக வழிகாட்டிக்கொண்டிருப்பதை எந்த ஆய்வாளர்களாலும் மறுத்துரைக்க முடியாது.

தத்துவமும், நடைமுறையும் பிரிக்க முடியாத நிலையில் இயங்குதலைக் கொண்டிருக்க வேண்டும் என்று கூறும் அவரது கூற்று அவர் வாழ்க்கையினை தெளிவுறக் காட்டியது.

உலகெங்கிலும் உள்ள ஒடுக்கப்பட்ட மக்களுக்காக குரல் கொடுத்து. சிந்தனையை எழுத்தில வடித்து இறுதி வரை இடையறாது பணியாற்றிக் கொண்டிருந்தவர் இன்று எம் மத்தியில் இல்லை. எனினும் அவர் சிந்தனையும் எழுத்தும் எங்கெல்லாம் மானுடம் எழுச்சியுறவேண்டுமோ அங்கெல்லாம் தன் பணியினை ஆற்றிக் கொண்டிருக்கும்.

– **பாரிஸ் தமிழர் கல்வி நிலையம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமுரசு

Eelamurasu Weekly

ஈழத்தின் முதுபெரும் எழுத்தாளர் திரு. எஸ். அகஸ்தியரின் மறைவு அவரது குடும்பத்தினருக்கும் மட்டுமன்றி தமிழ் இலக்கிய உலகிற்கே இழப்பு.

தான் கற்றுக் கொண்ட கொள்கையில் எந்தக் காலத்திலும் எந்தச் சமரசமுமின்றி இறுதிவரை உறுதியோடு உழைத்தவர்.

முரண்பட்ட கருத்துக்களை கொண்டோர்களையும் மதித்து, அன்புடன் அரவணைத்துக் கொண்டார். தன் இறுதிக் காலம் வரைக்கும் எழுத்துக்காகவே உழைத்தார் என்பது மிகையானது அல்ல.

அகஸ்தியரின் இழப்பால் துயர் கொள்ளும் குடும்பத்தினரதும் மற்றையோர்களினதும் மன உணர்வுடன் நாமும் இணைந்து கொள்கிறோம்.

ஈழமுரசு

12.12.1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீயை விழுங்கிய சிவப்பு எழுத்தாளன்........

மானுடம் காணவந்த
யுக மனிதன் நீ – உன்
கால் தடம் தொடர
நிதம் வரும் எம்மை
தோள் தட்ட மறந்து
சென்ற தென்ன!

தன்னையே நெருப்பில்
தீக்குளிக்க வைத்து
தீயை விழுங்கிய
சிவப்பு எழுத்தாளன்
தன் உடலை தீயிலிட்டான்
தன் உயிரை
தந்தான் தமிழுக்கு!

எழுத்து மைந்தன் அகஸ்தியரை
இழுத்து விட்டான் காலன் – அவன்
விழுதுகள் துளிர்விடும்
கனவுகளை நிசமாக்கும்!
எழுத்தை தன்னுள் வளைத்த
பழுத்த தமிழ் மன்னன் – இவன் மனதில்
எழுந்த கருக்கள் தன்
இனத்தை எழுப்பி நிற்கும்!

காலத்தோடு போட்டியிட்டு
காலத்தைத் தோற்கடித்த
இவர் தம்
வாழ்வியல் இலக்கியங்கள்
இவர் தன்
பேர் சொல்லி எழுந்து நிற்கும்!

மனித வாழ்வில்
விழுகின்ற ஏக்கங்கள்
தழுவி நின்ற எழுத்தால்
எழுகின்ற மாற்றங்கள்
நுழைந்து நின்றதால்
அழுகின்ற மனிதர்கள்
விழி துடைத்து – நல்
வழி காண வைத்து
நிலைத்து நின்ற எழுத்து
அகஸ்தியர் எழுத்து

நிசம் மறைந்ததனால்
நிழல்கள் நாம் அழுகின்றோம்!
உன் உயிரை மீட்டுவர
எத்தனை கண்களின் கண்ணீர்
இத்தனையும் உனக்கே சொந்தம்
வந்தெம்மை பார்த்திட வா...!

– **கீழ்கரவை பொன்னையன்**
**பொன் கலைக்கூடம்**
**14.12.1995**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழன்

## இலக்கிய வானில் கொடிகட்டிப் பறந்த ஈழத்து இலக்கியவான் எஸ். அகஸ்தியர்

ஈழத்து இலக்கிய வானில் தனக்கென ஒரு தனியிடம் பெற்று தனது எழுத்தாளுமையினால் மக்கள் நெஞ்சங்களில் நிலைபெற்ற 'இலக்கியவான்' எஸ். அகஸ்தியர் அவர்கள் எமை விட்டு விடைபெற்றுவிட்டார். வாழ்ந்த காலம் வரை எழுத்தை நேசித்து தன் இறுதி மூச்சுவரை எழுதிக்கொண்டிருந்த அந்த மாபெரும் எழுத்தாள் இன்று நம்மிடையே இல்லை.

'எனது எழுத்து எனக்கு சொந்தமில்லை. அது மக்களுக்கே சொந்தமானது' என அடிக்கடி கூறிவந்தவர் அகஸ்தியர் அவர்கள். அவர் கூறியபடி தனது எழுத்துக்களை எல்லாம் மக்களிடம் வழங்கிவிட்டு அவர் பயணமாகிவிட்டார்.

அகஸ்தியர் என்கின்ற ஒப்பற்ற எழுத்தாளனின் கருத்துக்கள் எழுத்துக்கள் யாவும் மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. இனிவரும் சந்ததியினரும் உள்வாங்க வசதியாக அவரின் படைப்புக்கள் நூல் வடிவங்களாக வீற்றிருக்கின்றன.

வசதி வாய்ப்புக்கள் மனித மனங்களை மழுங்கடித்துவிடுகின்ற இந்த ஐரோப்பிய மண்ணிலே தனது இறுதிக் கால கட்ட வாழ்க்கையை கடந்த பத்து ஆண்டுகளாக அவர் வாழ்ந்த போதிலும் தன் கருத்திலும் கொள்கையிலும் உறுதியாக இருந்ததை மட்டுமல்லாது தனது எழுத்து நடவடிக்கைகளை வேகப்படுத்தியதையும் அவதானிக்க கூடியதாக இருந்தது.

பாரிய நோயினால் பாதிக்கபட்டிருந்தவர். அடிக்கடி வைத்தியசாலை சென்று வருவார். இம்முறையும் அவர் மூன்று நாட்களில் திரும்பி வந்துவிடுவேன் என்றுதான் கூறிச்சென்றாராம். ஆனால் அந்த மூன்று நாட்களில் அவர் மூச்சும் அடங்கிவிடும் என்று எவரும் எதிர்பார்க்கவில்லை.

'பிரான்ஸ் டாக்டர்களும் தாதிமார்களும் என்னை போகவிடமாட்டார்கள்' என எமைக் காணும் வேளைகளில் கூறும் எங்கள் எழுத்தாளர் அகஸ்தியர் இம்முறை வைத்தியசாலை சென்று மீண்டும் வீட்டுக்கு வராமல் விடைபெற்றுவிட்டார்.

தாங்காத துயரில் ததும்பி நிற்கும் அவர் தம் குடும்பத்தினருக்கும், தலைசிறந்த இலக்கியவாதியை இழந்துவிட்டோம் என்று தாங்கொணா துயர் கொண்டிருக்கும் எழுத்தாளர் களுக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் தமிழன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் கலை இலக்கிய உலகிற்கு ஒரு பேரிழப்பு!

இலங்கையின் முதுபெரும் எழுத்தாளர் அகஸ்தியர் அவர்களின் மறைவு பற்றிக் கேள்விப்பட்டேன். துயரடைந்தேன். அகஸ்தியர் அவர்களின் மறைவு பொதுவாக தமிழ் இலக்கிய பரப்புக்கும் குறிப்பாக முற்போக்கு எழுத்தாளர், கலைஞர்களுக்கும் ஒரு பேரிழப்பே என்று கூறவேண்டும்.

45 ஆண்டுகளுக்கு மேலாக, ஒடுக்கப்பட்ட மனித வர்க்கத்தின் மேம்பாட்டிற்காக தமது கருத்தையும், எழுத்தையும் முழுமையாக அர்ப்பணித்தவர் அகஸ்தியர். தாம் எழுதிய பெருந்தொகையான சிறுகதைகள், நாவல்கள், தொடர்நவீனங்கள், கூத்துப் பாடல்கள் ஆகியவற்றில் மனித நேய உணர்வுகளை அவர் வெளிப்படுத்தி வந்தார். இலங்கைச் சமுதாயங்களிற் புரையோடிப் போன குறைபாடுகளை ஒளிவு மறைவின்றி அவர் அம்பலப்படுத்தி வந்ததோடு உலக சமுதாய சீர்திருத்த வழிகளையும் தமக்குரிய நிலையிலிருந்து சுட்டிக்காட்டி வந்தார்.

அகஸ்தியர் இலங்கையில் இருந்த காலத்தில் இருந்தே அவரை யான் அறிவேன், யாழ்ப்பாணப் தென்பாங்கில் புகழ்பெற்ற அகஸ்தியரின் மூத்த சகோதரர் அண்ணாவியார் சிலுவைராசாவுடனும் இலங்கையில் கலைத் தொடர்பு கொண்டிருந்தேன். எழுத்தாலும் கலையாலும் ஈழத்துக்கு பணியாற்றிய குடும்பம் அகஸ்தியரின் குடும்பமாகும். இந்த மூத்த எழுத்தாளரின் மறைவு தமிழ் கலை இலக்கிய உலகிற்கு ஒரு பேரிழப்பே.

அகஸ்தியரின் குடும்பத்தினருடனும் அவரது கலை இலக்கியத் தோழர், வாசகர்களுடனும் துயர் பகிர்கிறேன்.

ஈழக் கூத்தன்
தாசீசியஸ்
லண்டன் களரி அமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயலாது என்று கூறத் தெரியாத
# இலக்கிய வித்தகர் எஸ். அகஸ்தியர்

இயலாத வேளையிலும், இயலாது என்று கூறாமல் இலக்கிய நிகழ்வுகளிலும் ஏனைய நிகழ்ச்சிகளிலும் ஏனைய நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றி தன் கருத்துக்களை உறுதியுடன் கூறிவந்த முதுபெரும் எழுத்தாளர் எஸ். அகஸ்தியர் அவர்கள் தனது இறுதி யாத்திரையை மேற்கொண்டு விட்டார்.

'கலை நிகழ்ச்சி நடத்துகிறோம் அதற்கு தாங்களும் வருகை தரவேண்டும் என்கின்ற வேண்டுகோள்களுக்கு தலை சாய்த்து பதிலளித்து விழாவிற்கு வருகை தந்து அந்நிகழ்வை கண்டு களித்து அது பற்றிய ஆக்க பூர்வமான விமர்சனத்தையும் பகிர்ந்து கொள்பவர் எழுத்தாளர் எஸ். அகஸ்தியர் அவர்கள்'

ஆசிச்செய்தி, வாழ்த்துச் செய்தி, கட்டுரை, ஆய்வுரை, சிறுகதை என எதைக் கேட்டாலும் தன் கைபட எழுதி உரிய நேரத்தில் அவரே நேரில் வந்து கையளிக்கும் இனிய பண்பை அவரிடத்தில் நாம் கண்டுகொண்டோம்.

எழுத்தை மட்டுமல்ல, எழுத்தாளர்களையும், விமர்சகர்களையும் வாஞ்சையுடன் வரவேற்று அவர்களுடன் கருத்துப் பரிமாற்றம் நடாத்தும் ஒரு காத்திரமான இலக்கியவாதி.

ஈழத்து இலக்கிய உலகில் தன் முத்திரைகளை நிறையவே பதித்து வைத்திருக்கின்றார். வாசகர்களும் நேசகர்களும் அவரை மறக்காமல் மனதில் நிலை நிறுத்தி வைக்க அவரின் எழுத்துக்கள் இலக்கிய வானில் நிமிர்ந்து நிற்கின்றன.

வயதில் முதிர்ச்சியடைந்தபோதிலும் எழுத்து என்றதும் அவர் இருபது வயது இளைஞன் போல் துடிப்போடு செயற்பட்டதை நேரில் கண்டிருக்கிறோம். நோய்வாய்ப்பட்டிருந்த போதிலும் எழுதிக் கொண்டேயிருந்த அகஸ்தியர் அவர்கள் எழுத்தை நிறுத்தி விட்டார் என்ற செய்தி ஈழத்து கலை இலக்கிய உலகில் ஒரு பேரதிர்ச்சியை ஏற்படுத்திவிட்டது.

ஈழத்து கலைஞர்கள் மீது தீராத காதல் கொண்ட தனிப்பெரும் எழுத்தாளர் எஸ். அகஸ்தியரின் மறைவு மாற்றீடு செய்ய முடியாதது.

ஏங்கி நிற்கும் எழுத்துலகத்தினருடனும் வாடி நிற்கும் அவர் தம் குடும்பத்தினரோடும் நாமும் இணைந்து இழப்பின் துயரத்தில் பங்கேற்றுக் கொள்கிறோம்.

**– தலைவர்**
**ஐரோப்பா தமிழ் கலையகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகஸ்தியர் அவர்களின் மறைவு.......!

வளரும் எழுத்தாளர்களுக்கு ஓர் பேரிழப்பு தீவிர இலக்கியத்தில் நாட்டம் கொண்டோர் அரிதாகி வரும் இவ்வேளையில் ஐந்து தசாப்தங்களாக இலக்கியப் பணியாற்றி வந்த எஸ். அகஸ்தியர் அவர்களின் இழப்பு வளர்ந்து வரும் எழுத்தாளர்களுக்கு ஓர் பேரிழப்பாகவே கொள்ள முடியும்

அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்காக, அந்த மக்கள் குரலாக ஐம்பது ஆண்டுகளாக ஒலித்துக் கொண்டிருந்து ஓர் குரல் இன்று ஓய்ந்துவிட்டது. ஆமினும் மானுட நேயத்தோடு அவர் ஆற்றிய பணிகள் அவரை வாழவைக்கும்.

மக்களுக்காக வாழ்ந்த மனிதர்களுக்கு மரணம் என்பதே கிடையாது.

குடும்பத்தினர் நண்பர்களுக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**– கிருஷ்ணா அச்சகம் – பாரிஸ்**

(எழுத்தாளர் எஸ். அகஸ்தியரின் மறைவையொட்டி கிருஷ்ணா அச்சகத்தினரால் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரத்தின் மறு வெளியீடு.)

---

# சாகும் போதும்........!

வாழும் போதும் எம்மை விட்டுப்
போகும் போதும் – தமிழே
ஆகும் அவர் வாழ்வு!

வாழ்வின் முழுமையும் – நம்
இனத்திற்கே தந்தார்!
சாகும் போதும் – நம்
நெஞ்சில் நிறைந்தார்

ஈழ மண் அவர் பிறப்பிடம்
உலக மண் அவர் சொந்தம்
நாடு கடந்து வாழ்ந்தும் – நம் தமிழ்
ஈழ மண் நினைவு கொண்டோன் – எம்மை
ஆளும் அவர் வாழ்வு மறவோம் – எம் அகத்தில்
வாழும் வரை அவர் அகஸ்தியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– ஈழ நிலா இசைக்குழு

# மூத்த எழுத்தாளர் மூச்சு நின்றதோ.........!

ஆனைக்கோட்டையில் பிறந்து ஈழத் தமிழ் மக்களுக்கு பெருமை சேர்த்து
உலகில் வாழும் தமிழர்க்கு எடுத்துக்காட்டியாக இவர் எழுத்துக்கள்
சிங்கள, மலையாள, ரஷ்ய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டது
நமக்கெல்லாம் பெருமையே இவர் புகழ் உலகம் அறிந்ததே!

புகலிடத்தில் வாழ்வை கழிக்க பாரிசில் வாழ்ந்து கொண்டிருந்தவர்
எப்படி ஈழத்தில் வாழ்ந்தாரோ அதைவிட சுறுசுறுப்புடன்
தன் பேனாவை விரைவாக கையாண்டு பல ஆக்கங்களை
நமக்கெல்லாம் தந்தவர் இன்று நம்மோடு இல்லை!

கலைஞன் தன் வாழ்நாளில் கலையை முதற் காதலியாக
கொள்பவன் என்பது அனைவரும் அறிந்ததே - ஆனால்
இவர் கலையையும் மனைவியையும் ஒன்றாக நேசித்தவர்
ஆதலினால் தான் இவரும் துணைவியும் ஒருவரையொருவர் பிரியாது
இணைந்தே செல்வதை பார்த்துள்ளோம்
பல கண்கள் பட்டதினால் தானோ இவர் சீக்கிரம்
துணையை விட்டு சென்றிட்டாரோ!

இவர் எழுத்து மேல் கொண்ட நேசம் போல்
இறுதிவரை தனது சட்டைப் பையில்
ஒரு இளவயதுப் பெண்ணின் புகைப் படத்தைக் கொண்டு செல்பவர்
அடிக்கடி அந்தப் படத்தைக் காட்டி
யார் இவர் எனக் கேட்பதும் நாங்கள் பார்த்து வியந்ததும்
ஈற்றில் அவரது துணைவியார் எனச் கண்டதும்
அவர் துணைவிமேல் கொண்டுள்ள பாசத்தைக் கண்டு
நாம் பொறாமைப் பட்டது உண்டு
இன்று அனைவரையும் விட்டுச் சென்று
எம்மையெல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டார்
அனைவர் துயரோடும் நாம் பங்கேற்கிறோம்.

— ஆர். ரி. எம். பிறதர்ஸ் இன்டர்நேஷனல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

நல்லியக்கம் தந்த நல்லான்

நயம்பட வாழ நிறைவழி நவின்றவர்

பல்லியக்கம் பலவே கற்று - எம்

புகழ் பரப்பும் வேந்தனுமாகி

சொல்லி தன் பொருளை சகலர்க்கும்

சீரிய வழி சொல்லிய மகனார்

வல்லமை கண்ட மாந்தருக்கிடையில்

வாழ இறை விரும்பவில்லையோ?

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திப்பதோடு அவரைப் பிரிந்து துயருறும் மனைவி பிள்ளைகள் உறவினர்க்கு எனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்

**கலைக்கோயில் அதிபர்** **டி.கிரகறி தங்கராசா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய விடிவெள்ளி மறைந்ததே......!

எழுதுகோல் எடுப்போனெல்லாம் எழுத்தாளன் என்றிருந்தேன்
இவர் தமைக் கண்டபின்தான் எழுத்துக்கே அர்த்தம் கண்டேன்
பொழுதினைப் போக்குதற்கோ பொருளினைச் சேர்ப்பதற்கோ
எழுதுதல் எழுத்தாகாது ஏழைகள், அறியா மக்கள் இயல்பினால்
சிந்தனைகள் ஏதுமே இல்லாதார்கள்
இவர்களை எழுப்பும் வேலை எழுத்தாளன் வேலையாகும்

சமுதாயம் திருந்தச் செய்வோன் சரியாக எழுத்தை ஆழ்வோன்
பிறிதாகக் கவர்ச்சி தேடும் பிதற்றல்கள் எழுத்தாகாது
இதுதானே எழுத்துக்கெல்லாம் இலக்கணம் என்று சொன்னார்
சொல்லிடும் பலரும் தாங்கள் சொன்னதை செய்ததில்லை
என்னுயிர் நண்பர் எங்கள் ஏந்தலோ நின்ற சொல்லர்

அன்னை நாடிழந்து நாமும் அன்னிய நாட்டில் வந்து
சொந்த பண்பாட்டை மேற்கு வீதியில் தொலைத்துவிட்டு
என்னதான் செய்வதென்று இருட்டினில் வாழும் போது
எழுத்தாணி விளக்கால் இந்த விடிவெள்ளி வெளிச்சம் காட்டும்
அன்னவர் மறைந்த பின்னர் ஆருளர் அறிவு காட்ட?
எங்களின் வானம் இன்றோ டிருண்டுதான் போமிற்றையோ
இலக்கிய வீதி தன்னில் இன்று நாம் அனாதையானோம்

விடுகின்ற மூச்செல்லாம் இலக்கியம் தான் வெற்றுச் சொல் ஒருபோதும் பேசமாட்டார்
கடுகடுப்பை முகத்தில் என்றும் கண்டதில்லை காலமோ அவர் எழுத்தில் குறைந்ததில்லை
காசுக்காய் எழுதாமல் அறிவு நல்கும் கடமைக்காய் எழுதுகின்ற கடமை வீரர்
நாசூக்காய் பேச்சிருக்கும் அவரின் பேனா நடக்கின்ற பாதையெல்லாம் புரட்சி பூக்கும்
ஏசிடுவார் சமுதாய கொடுமை தன்னை என்றாலும் அவர் எழுத்து எவர்க்கும் தேனாம்

தள்ளாத வயதினிலும் தமிழ் எழுத்தை தள்ளாத மாவீரர் தமிழின் பெயரால்
எல்லாரும் பொருள் சேர்ப்பார் இவரோ மக்கள் இல்லாமை இருள் அகற்றும் பொருளைத் தந்தார்
அவர் இரத்தம் மாசுபட்டால் அவ்விடத்தில் வேறு இரத்தம் மாற்றுதற்கு வழியைக் கண்டார்
அவர் எழுத்து நின்றுவிட்டதின்று பாரில் அவ்விடத்தை நிரப்புதற்கு யார் தான் உள்ளார்?
எல்லோரும் ஒன்றாகி மரணம் என்னும் இரக்கமில்லா கொடியவனை வைவோம் வாரீர்!

– பேராசிரியர் சக்தி புயல்

(எழுத்தாளர் எஸ். அகஸ்தியரின் மறைவையொட்டி பேராசிரியர் சக்திப்புயல் அவர்களால் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரத்தின் மறு வெளியீடு.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும் எழுத்துக்களைச் சுமந்த உடல்.......!

இலக்கிய வாழ்க்கையைக் காட்டும் கண்ணாடி எழுத்தாளன் சமூகத்தைக் காட்டும் கண்ணாடி. அரை நூற்றாண்டு காலமாக ஈழத்து-தமிழ் சமூகத்து மதம், ஜாதி, மூட நம்பிக்கை முதலானவற்றின் புரையோடல்களை தன் எழுத்துக்கள் மூலம் மண் வாசனை கமழ தோலுரித்துக் காட்டியவர் அகஸ்தியர். இவர் தன் நவீன எழுத்துக்களால் சமூக சீர்கேடுகளை வெளிக்காட்டிய போதெல்லாம் இவரைப் பாராட்டி ஆதரிப்பதற்குப் பதிலாக வசைபாடி, எதிர்த்த தற்சார்பு நிலை விமர்சகர்களே அதிகம்.

தமிழ் இலக்கிய உலகில்-உரை நடையில் முதல் தமிழ் நாவலாக மயூரம் வேதநாயகம் பிள்ளையின் பிரதாப முதலியார் சரித்திரம் கருதப்படுகிறது. ஆனால் அதே காலப் பகுதியில் ஈழத்தில் முதல் தமிழ் நாவலை ஜனாப். சித்தி லெப்பையின் உசன்தே சரித்திரம் எழுதப்பட்டது என்பதை தமிழ் இலக்கிய உலகிற்கு தெரியச் செய்தவர்.

உணர்வூற்று உருவகச் சித்திரத்தை தோற்றுவித்த இவர் பொதுவில் ஒரு துணிவு மிக்க எழுத்தாளி.

**உரையழகிங் கெவர்க்கு வரும்! – அந்த**
**நடையழகிங் கெவர்க் குண்டு?**

While an author is yet living we estimate his powers by his worst performance and when he is dead, we rate them by his best.

– 'எரி நெருப்பில் இடைபாதையில்லை' நாவலுக்கு எனது விமர்சனம்

பெரும் எழுத்துக்களைச் சுமந்த உடல்! – அதனால்
பெரும் விமர்சனங்களை வாங்கிய உடல்
அகஸ்தியர் என்னும்

அரும் பெயரைச் சுமந்த நரை – ஆங்கே
அழற்கதிரை சுமந்த மதி
சமூகச் சீர்கேடு மேல்

இரும்புலக்கை மொத்துதல் போல் – அடி
எடுக்காமல் அடித்த அடி
குத்துவது போல் பேச்சு

பெரும் நோயுடலைச் சுமந்து – ஐரோப்பாவில்
பல ஊர்கள் திரிந்து
தமிழிலக்கியத் தொண்டு செய்த
அகஸ்திய எழுத்தாளரை இழந்தோமே!

இப்பெரியாரின் பாரியாருக்கும் பிள்ளைகளுக்கும் என் உளம் அழும் அனுதாபங்கள்

– ச. சச்சிதானந்தம் (அனைத்துரிமையர் – **Ecole de Tamoul)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னும் வாழவேண்டியவர்.......

எழிமையும் இனிமையும்
தன்னகத்தே கொண்டோன்
தமிழையும் எழுத்தையும்
வாழ்வியலில் தந்தோன்
நம் இதய வாடாமலர்
அகஸ்தியர் இன்று
இல்லை எம்மோடு – அவர்
நினைவுண்டு எம்மோடு!

ஆயிரம் விண் மீன்கள்
வானத்தை வட்டமிடும்
ஆயினும் ஒரு மதி
வானத்தை ஆளும் – பல்
ஆயிரம் இலக்கியங்கள்
காலத்தை ஆண்டாலும்
அகஸ்தியர் இலக்கியங்கள்
அத்தனையையும் வென்று நிற்கும்

மானத்தை தன்னகத்தே கொண்டு – வரு
மானத்தை விட்டகத்தியே
பாழாய்ப் போன சமூகம்
வாழப்போக வேண்டுமென – தன்னை
முழுமையாக தந்த பெருந்தகை

அகஸ்தியர் இன்னும்
வாழவேண்டியவர்! அகிலத்தை
ஆழவேண்டியவர்!
ஏன் இல்லை இன்று! திகைக்கிறேன்!
கண்ணீர்தான் வருகிறது
தள்ளாடும் வயதிலும் தன்
கலைப்பயணத்தின் தொடராக
என்னையும் ஆசீர்வதித்து
விட்ட அவர் தம்
நினைவை மீட்டுப் பார்க்கிறேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– ஆசிரியர் 'தென்றல்'

# எங்கள் இலக்கியத்தின் இலக்கணமே......!

ஈழத் தமிழ் இலக்கியத்தின் நட்சத்திரமொன்று
கிழக்கில் 1926ல் தோன்றி அது
மேற்கில் 1995ல் மறைந்துவிட்டது
கண்கள் கண்ணீர் வடிக்க! கைகள் பதற!
உள்ளம் எதற்கோ உந்தகின்றது!
இன்னும் – இன்னும் சில காலம்
எங்கள் மத்தியில் எங்களுடன் வாழ்ந்திருந்தால்......
சங்கத் தமிழும் சங்கிலித் தமிழும்
அரசோச்சிய நாவலிலக்கிய சாம்ராஜ்யத்தினை
சாதாரண கிராமியத் தமிழும் அரசோச்ச முடியும்
என்பதற்கு கட்டியம் கூறியவர்கள் நீங்கள்
ஈழத் தமிழ் இலக்கிய வரலாற்றில்
நீங்கள் ஓர் மைல்கல்! உங்களை தாண்டித்தான்
எல்லோரும் பயணப்படவேண்டியவர்கள்
இதற்கும் மேலாக பேராதனைப் பல்கலைக்கழகமும் கூட
முதுமானிப் பட்டம் வேண்டி உங்கள்
சுவடுகளை அலசுகின்ற
இலக்கியத்தின் இலக்கணம் நீங்கள்!
நீங்கள் நடந்து வந்த பாதையில்
இருளைக் கிழித்து வரும் ஒளிப்பிழம்பு – வான்
முகிலைக் கிழித்து வரும் செங்கதிர்கள்
கடலைத் திரட்டிவரும் பேரலைகள் – விண்
வெளியை உடைத்துவரும் பெருங்காற்று
இத்தனைக்கும் அப்பாலும்
உங்களை! உங்கள் உணர்வுகளை!
உங்கள் எழுத்துக்களை!
கொண்ட கொள்கையில் அணுவளவும்
விலகாத தன்மையை அதற்கும் அப்பால்
அரசினால் கொடுக்கப்பட்ட
வெகுமதியையும் வெகு மதிப்பையும் கூட
பெற்றுக் கொள்ள மறுத்ததினால் செங்கோலையும் மிஞ்சியது
எழுதுகோல் என்பதை எடுத்துக் காட்டிய பெருமை
உங்கள் பெருமை! எங்கள் இலக்கியமே!
இலக்கியத்தின் இலக்கணமே! ஈழத்தமிழ் இலக்கிய உலகம் மட்டுமல்ல
உலகத் தமிழ் இலக்கிய உலகமே
உங்களுடன் என்றும் சங்கமித்து நடக்கும்
நீங்கள் என்றும் எங்களுடனேயே வாழ்கின்றீர்கள்

– கண்ணீர்த் துளிகளுடன் மெய்கண்டான் அச்சகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் உயிர்ப்பிலக்கிய கனவான்........!

முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் தன்னையும் இணைத்துக் கொண்டு தனக்கென ஒரு துறையையும், ஒரு பாசறையையும் தேர்ந்தெடுத்துக் கொண்டு தனது சீரிய பணியினை சிறப்புற வடிவமைத்த முதுபெரும் எழுத்தாளர் அகஸ்தியர் ஐயா அவர்களின் இழப்பு கலை இலக்கிய உலகில் ஒரு பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்துக் கிடையாது. தமிழ் பேசும் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் தொட்டு அவர்களின் வாழ்வு வழிமுறைகளை நயம்பட எடுத்துக் காட்டிய அவரது பாங்கு என்றுமே அவர் ஒரு மூத்த எழுத்தாளர் என்ற முத்திரையைப் பதித்தது.

குறிப்பாக தனது சிந்தனைகளை தனக்கு எழுதத் தோன்றியவைகளை சமூகத்தில் காணப்படும் குறைபாடுகளை நேரடியாகவே முன் வைக்கக் கூடிய ஆற்றல் இவரிடம் நிறையவே காணப்படுகிறது. கிராமிய மணம் இவரது ஆற்றலை மேலும் முன்னெடுத்துச் செல்ல ஓர் ஊடகமானது.

ஒரு கலைஞன் என்ற கோதாவில் பலதரப்பட்ட விமர்சனங்கள், பலதரப்பட்ட காலங்களில் இவருக்கு எதிராகத் தெரிவிக்கப்பட்டும் வந்தமைக்கு அவ்விமர்சனங்களுக்கான இவரின் பதிலிறுப்பானது விமர்சகர்களையும் இவரின் பால் ஈர்க்கவல்லது. இருந்தும் தான் கொண்ட கொள்கையிலிருந்து விடுபடவோ மாற்று வழி தேடவோ அவர் முனைந்ததாக இல்லை. இது இவரது நெஞ்சுர வலிமையையும் தன் பார்வையின் தெளிவான கோணத்தையும் சுட்டி நின்றன.

ஒரு கலை இலக்கிய நற்சிந்தனையுள்ள பெருமானாரின் பிரிவு எவ்வேளையிலும் ஜீரணிக்கக் கூடியதாக இருக்கவில்லை. எம் நெஞ்சப் பரப்புக்களிலே தான் வாழ்கின்றார். வரிக்கு வரி அவரது கருத்துக்கள் அவரையே மனக்கண் முன் நிறுத்துகிறது. மரணம் கூட அவரை நெருங்காத படி அவரது திறமைகள் மரணத்தை வென்றது. ஆனால் இறுதியில் மரணம் வென்றுவிட்டது. அவர் எம்மை விட்டுப் பிரிந்தாலும் அவர் படைத்த இலக்கியம் எங்களை விட்டுப் பிரியவில்லை.

அவர் துயரால் வாடும் அனைவரது கண்ணீருடன் என் கண்ணீரையும் இணைத்துக் கொள்கிறேன்.

– சிவலிங்கம் சிவபாலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்ப்புள்ள இலக்கியவாதி எஸ். அகஸ்தியர்

கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக தான் சார்ந்த இயக்கத்துக்கும் கொண்ட கொள்கைக்கும் அயராது உழைத்த எஸ். அகஸ்தியர் அவர்களின் அயராத உழைப்பு கலை இலக்கிய உலகில் ஈடுசெய்ய முடியாததொன்று. அவர் உடலை விட்டு உயிர் பிரிந்திருக்கலாம் ஆனால் அவர் தந்த இலக்கிய உடலை விட்டு உயிர் என்றுமே பிரியாது. மரணம் அவரிடம் தோற்றுத்தான் போய்விட்டது.

தான் சாந்த மார்க்கத்தை நோக்கிய பயணத்தை நெஞ்சு நிமிர்த்திய விமர்சனங்களுக்கெல்லாம் அடக்கமாக எழுத்துருவில் பதில் தந்து கொண்டு கொள்கையில் இருந்து சிறிதேனும் விலகாமல் இறுதி வரை தன் போனா முனைகளுக்கு தன்னையே அர்ப்பணித்துக் கொண்டவர்

எழுத்தாளராகவே மட்டும் அறிந்து கொள்ளப்பட்ட எஸ். அகஸ்தியர் அவர்கள் பன்முக ஆளுமை கொண்ட ஓர் அற்புதக் கலைஞர் என்பது அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கொண்டோர் மட்டுமே அறிந்திருக்க முடியும்.

பல்வேறு மட்டத்தினர் மத்தியிலும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய இவரது இழப்பினால் துயருறும் அனைவருடன் நாமும் பங்கேற்கிறோம்.

– திருமறைக் கலாமன்றம் – பாரிஸ்

(எழுத்தாளர் எஸ். அகஸ்தியரின் மறைவையொட்டி திருமறைக் கலாமன்றம் பாரிஸ் கிளையினரால் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரத்தின் மறு வெளியீடு.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படைப்பாளியை வென்ற படைப்புக்கள்.......!

ஒரு படைப்பாளி!
படைப்பாளி வென்ற படைப்புக்கள்!
படைப்புக்களை தேடினேன்
படைப்பாளி என் முன் நின்றார்!
படைப்பாளியை தேடினேன்
படைப்புக்கள் என் முன் நின்றன!

என்னுள் பிரமை! என்
நெஞ்சில் அகஸ்தியர்
என் முன் அவர் படைப்புக்கள்
இவர் இறந்தார்......!
என்ன செய்தி இது
என்னால் நம்ப முடியவில்லை
ஓடினேன்! தேடினேன்!
அவரைக் காணமுடியவில்லை!

கால்கள் சோர்ந்தன தான்
கண்களை மூடினேன்
சிரிப்பலைகள் என் காதில் – என்
நெஞ்சிலிருந்து சிரித்தார்!
எப்படி இறந்தார்
கண்களைத் திறந்தேன்
என் முன் அவர் விதைத்த
புத்தகங்கள்! எழுத்துக்கள்!

– மொறிஸ் கிறிஸ்ரி 'ஸ்ரெலா பிக்சர்ஸ்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருட்சமொன்றின் வீழ்ச்சி.....!

இவரின் மரணம்
ஒரு சருகு இலையின் உதிர்வல்ல
சரித்திர மலையின் சரிவு
பத்தோடு ஒன்றாய்ப்
பாடையில் போய்விடும் மரணமல்ல
விதையாகி வித்தாகி நின்ற, பெரு
விருட்சமொன்றின் வீழ்ச்சி
மானிடம் வீழ்ச்சியுறாமல்–எழுத்தில்
மல்லுக்கட்டி நின்ற
மாமனிதன் ஒருவரின் மறைவு
போரிடுதல் ஒன்றுதான்
மானிடத்தின் பொதுப்பண்பு என்று
புரிந்து கொண்ட
போர் மறவர் ஒருவரின் பிரிவு இது
ஈழத்து தேசிய எழுச்சியினை
இன்னும் இன்னும்
உயிர்த்தி வைக்க உழைத்த ஒரு
எழுத்துழவரின் இறப்பு இது
அகஸ்தியரின் எழுத்துக்கள்
இன்னும் இன்னும்
பலநூறு ஆண்டுகளாய்
மானிடத்தின் மனங்களுக்குள்
போர் முரசு அறையும் இவரின்
வாழ்வு இன்னும் இன்னும்
இயங்கவேணும் என்று நின்றெரியும்
தீபங்களுக்கு ஒரு முன்னுதாரணம்
மனதால் முதிராத இம்மாமனிதன்
இன்னும் இளமையாய்
என்றும் இளமையாய்
ஈழத்தின் தேசிய எழுச்சியிலும்
ஈழத்து மண்ணை எந்நாளும்
நினைக்கும் மனங்களிலும்
நிறைந்திருக்கும்

– தமிழீழ மக்கள் (டென்மார்க்)

(எழுத்தாளர் எஸ். அகஸ்தியரின் மறைவையொட்டி டென்மார்க் வாழ் தமிழீழ மக்களால் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரத்தின் மறு வெளியீடு.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணத்தை வென்ற மனிதர்.......!

'மானிட நேயத்தோடு சமுதாய முன்னேற்றத்திற்கும் அதன் மாற்றத்திற்கும் எழுதும் படைப்பாளிகளின் கலை இலக்கியங்கள், பிற்போக்கு கலை இலக்கியங்களை வேரோடு மண்ணோடு கிள்ளியெறிய வேண்டும் என்ற பாரிய பணியில், சமூகவியல் பாங்காக எழுதும் இயக்கவியல் முற்போக்கு கலை இலக்கியங்கள் சகிதம் ஈழத்து முற்போக்கு கலை இலக்கியங்களும் இன்று கை கோர்த்து முன்னணியில் திகழ்கின்றன.

நான் இந்த முன்னணிப் படைப்பாளி'

– எஸ் அகஸ்தியர்.

எஸ். அகஸ்தியர் அவர்களின் இழப்பு
சுறுசுறுப்பான இலக்கிய உலகிற்கு ஓர் ஈடு செய்ய முடியாத இழப்பு!
பாரிஸ் இலக்கிய உலகிற்கு ஓர் மூத்த எழுத்தாளரின் இழப்பு!
அன்பான குடும்பத்துக்கு ஓர் இனிய தலைவரின் இழப்பு!

பல்வேறு வகை இலக்கிய பணியாற்றிய எஸ். அகஸ்தியர் அவர்கள் ஐந்தாண்டு காலமாக பாரிசில் வெளிவந்த 'ஓசை' காலாண்டு இலக்கிய சஞ்சிகையின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**இறுதி வரை ஓயாது ஊற்றெடுத்த பேனாவுக்கும்**
**அவர் தம் நெஞ்சுறுதி – கடமை உணர்விற்கும்**
**தலை தாழ்த்தி எங்கள் அஞ்சலி!**

பிரிவால் துயருறும் குடும்பத்தினர், உறவினர், நண்பர்களோடு
துயரத்தில் பங்கேற்கும்.......

– இலக்கிய நண்பர்கள் –
பாரிஸ்.

(எழுத்தாளர் எஸ். அகஸ்தியரின் மறைவையொட்டி 'ஓசை' இலக்கிய நண்பர்களால் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரத்தின் மறு வெளியீடு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசுர எழுத்தாளர் எஸ்.ஏ........

அசுர எழுத்தாளர் என்று அவரது இலக்கிய நண்பர்களால் அன்பாக அழைக்கப்படும் மூத்த எழுத்தாளர் எஸ். அகஸ்தியர் அவர்களின் மறைவுச் செய்தி எம்மை அதிர்ச்சியுற வைத்தது.

தமிழகத்தில் 'மணிக்கொடி' காலம் போல் ஈழத்தில் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் காலமும் ஓர் இலக்கியப் பதிவுதான் என்பதை எவரும் மறுக்கமுடியாது. இந்த முற்போக்கு இயக்கத்தின் முன்னணி நாயகர்களுள் எஸ். அகஸ்தியர் அவர்களும் ஒருவர் என்பது பெருமை கொள்ளத்தக்கது.

ஐம்பது ஆண்டுகாலமாக 'நமக்குத் தொழில் எழுத்து, இலக்கியத்திற்கு உழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல்' என்று ஈழத்து 'அகஸ்தியம்' ஆகியவர் திரு. எஸ். அகஸ்தியர்.

மகாஜனாக் கல்லூரிக்கும் அகஸ்தியர் அவர்களுக்குமிடையேயான தொடர்பு மகாஜனாவின் இலக்கிய மணிகள் மகாகவி, அ.செ.மு. அ.ந.க. விலிருந்து பாரிஸ் வரை நீளமானது.

நோய்வாய்ப்பட்டிருந்த வேளைகளிலும் கூட நாம் அழைத்த போதெல்லாம் பாரிசின் எந்த மூலையில் இலக்கியக் கூட்டம் நடந்தாலும் தத்தித் தவழ்ந்து வந்து சிறப்பித்தவர்.

தலையில் தொப்பி, மூச்சிழுக்கும் இதயம்,...... நின்று நின்று நடந்துவரும் காட்சி

நினைக்கும் போது நெஞ்சு உருகிறது......

அவரின் இலக்கிய நேசிப்பும் ஆவலும் போற்றுதற்குரியன.

'எழுத்தாளன் என்றுமே மரணிப்பதில்லை'

அகஸ்தியர் அவர்களும் மரணிக்க முடியாது.

அவர் எழுத்துக்கள் என்றென்றும் வாழும்.

பிரிவால் கவலை கொள்ளும் குடும்பத்தினர் நண்பர்களுடன் நாங்களும் கலந்து கொள்கிறோம்.

**– மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்**

(எழுத்தாளர் எஸ். அகஸ்தியரின் மறைவையொட்டி மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினரால் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரத்தின் மறு வெளியீடு.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய நெஞ்சங்கள் உகுத்திடும் கண்ணீர்....!

இலக்கிய வாழ்வதில்
இமையமாய் திகழ்ந்து
வறுமையை கொடுமையை
உண்மையை உரைத்து
வெறுமையாய் கிடக்கும்
மனித வாழ்வினை மாற்ற
தீப்பொறியென பறந்து
எழுத்தால் எரித்து! நீ நின்றாய்

விண்ணென பறந்து
விடிகதிரென உதிர்த்து
மண்ணிலே நிகழும்
மடமையை ஒழித்து
உன்னத உலகை
உருவாக்கிட விரைந்து
கண்ணென கருத்தை
கதைகளில் வடித்தாய்

நிலமிழந்து எம்துயர்
நீக்கிட கரமிணைந்து
புலம்பெயர் வாழ்வினில்
புது அனுபவம் கற்று
உலகத்து உழைப்பவன்
உயர்ந்திட குரல் கொடுத்து
விளங்கிட பொதுமை
விளிவிலியென இருப்பாய்

இயக்க இயலினை
பயின்றதானாலோ
இழப்பினைத் தந்து
பிரிந்திட நினைத்தாய்
இலக்கிய நெஞ்சங்கள்
இன்று உகுத்திடும் கண்ணீர் – நின்
இலட்சிய பாதம் நனைத்திட
காணிக்கை உனக்கு!

– தீரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதிர்ந்த வாழ்விலும் இளம் கதிரென.......!

பொதுநலம் உரைத்து
புது வழிதனை நினைத்து
புதுப் புதுக் கருத்தினை
மனித
மனங்களில் விதைத்தாய்!
மக்களை மதித்து
அவர் கதைகளை புனைந்து
மக்களிற்கே அதை
மீளவும் கொடுத்தாய்!
இடம் பெயர் நிலையிலும்
இடர்களைச் சுமந்து
திடமென இருந்து
கொள்கையை
திறன்பட உரைத்தீர்
முதிர்ந்த வாழ்விலும்
இளங்கதிரென விளங்கி
இலக்கியம் படைத்திடும்
இலட்சியப் பணிதனை
தொடர்ந்தீர்!
கலைகளை வளர்த்து
வளர் கலைஞரை அணைத்து
பிறர் கலை போற்றி
பெரும் கலை தோன்ற
அரும்பணி செய்தீர்!

பிரிவினை தந்தீர்
பெரும் சோகத்தை அளித்தீர்
எங்கள்
மனங்களோ தவிக்க
விழிகளோ வடிக்கும்
கண்ணீர் உமக்கு காணிக்கையாக

– ஸ்ரீ பாரதி அச்சகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல் கலை
## பிறக்கும் இவரிடம்

நாட்டுக்கூத்துக் கலைவடிவம் கீழைத்தேயக் கலைகள் அனைத்துக்கும் முந்தியதும் முதன்மையானதும் இதன் பின்னணியாகவே கர்நாடக இசையும் வளர்ச்சியடைந்து இன்று கீழைத் தேசத்தில் மட்டுமன்றி சர்வ உலகிலும் உன்னத கலையெனக் கொண்டு திகழ்கின்றது. இவ் உன்னத கலையின் வெளிப்பாடாகவே பரதக் கலை, கர்நாடக இசை, நாடகவியல் என்பன பல்வேறு கலைவடிவங்களில் இன்று வியாபித்து வருகின்றன.

(எஸ். அகஸ்தியர் 1981ல் எழுதிய நாட்டுக்கூத்துக் கலாநிதி பூந்தான் ஜோசப்பு வாழ்க்கை வரலாறு என்ற நூலிலிருந்து.)

அகஸ்தியர் ஒரு எழுத்தாளர் மட்டுமல்ல இசைஞானம் கொண்ட நல்ல கலைஞர். மிருதங்க வாத்தியத்தை மிதமாக வாசிக்கத் தெரிந்தவர். நாட்டுக்கூத்தின் சகல ராகங்களையும் இதமாக பாடத் தெரிந்தவர். நாட்டுக்கூத்து நடிக கலாமணி எஸ். சிலுவைராசாவின் சகோதரர். உடல் தளர்ச்சியுற்ற நிலையிலும் கலை நிகழ்வுகள் அனைத்திலும் இவர் கலந்து கொண்டமை இவரின் கலை ஆர்வத்திற்கும் அதன் மீது கொண்டுள்ள பற்றுக்கும் ஒரு எடுத்துக்காட்டு. அடக்கு முறைக்கும் கொடுமைகளுக்கும் எதிராகக் குரல் கொடுக்கும் தன்மை கொண்டிருப்பவர்கள் கலைஞர்களே. இயல்பான இவரின் கலையுணர்வே எஸ். அகஸ்தியரை இன்று பாரறிந்த எழுத்தாளராக்கியுள்ளது.

சமூக முன்னேற்றத்திற்காக அவர் எழுதிக் குவித்தது ஏராளம். மனித நேயத்திற்காக – மனித முன்னேற்றத்திற்காக எழுதும் கரங்கள் இன்று ஓய்ந்து வருகின்றன. குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் பல்வேறு காரணிகளைத் தடைகளாகக் காட்டி எழுது கோலைக் கையிலெடுப்போர் அரிதாகி வரும் வேளையில் இறுதிவரை தன் பேனாவிற்கு ஓய்வு கொடுக்காது வளர்ந்து வருவோருக்கு நல் முன் மாதிரியாகத் திகழ்ந்தவர் இன்று இல்லாது போனது கலை இலக்கிய உலகிற்கு ஒரு மாபெரும் இழப்பேயாகும்.

– தமிழீழக் கலைஞர் ஒன்றியம், பிரான்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அகஸ்தியர் பற்றி...........

கவிதையோடு இலக்கிய உலகில் பிரவேசித்த அகஸ்தியர் 360 சிறுகதைகள், 40 குட்டிக் கதைகள், 10 குறுநாவல்கள், 9 நாவல்கள், 100க்கு மேற்பட்ட கட்டுரைகள், விமர்சனங்கள், ஆய்வுகள், 20 வானொலி நாடகங்கள், நாட்டுக்கூத்து நாடகங்கள், 'உணர்வூற்றுருவகச் சித்திரம்' என்ற புதிய இலக்கிய வடிவம் - என்றெல்லாம் எழுதியுள்ளார். இருபது புனை பெயர்களில் எழுதிவரும் அகஸ்தியர், கர்நாடக இசையில் பரிட்சயம் உள்ளவர். மிருதங்கம் வாசிப்பவர். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தலைமைக் குழு உறுப்பினரான அகஸ்தியர், இலங்கையின் சகல பத்திரிகைகள், சஞ்சிகைகளிலும், லண்டன் பி.பி.சி. தமிழோசை, இந்தியாவில் 'தாமரை', 'எழுத்து', 'கலைமகள்', 'தீபம்', 'ஜீவா', கண்ணதாசன் ஆகிய சஞ்சிகைகளிலும் எழுதியுள்ளார். 50 ஆண்டாக இலக்கியப் பணியில் மூழ்கிய இவரின் எழுத்துக்கள் சிங்களம், மலையாளம், ருஷ்ய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

29.08.1926 இல் யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை சவரிமுத்து - அன்னம்மா தம்பதியரின் மூன்றாவது மகனாகப் பிறந்த அகஸ்தியர், 1983 ஜூலை இலங்கை இனக்கலவரத்தினால் பாதிப்புக்குள்ளாகி, மனைவி, மக்களுடன் பிரான்சிலே 1986ல் அரசியற் தஞ்சமடைந்தார். நான்கு பிள்ளைகளுக்கு தந்தையான இவர் பாரிசிலே 08.12.95 அன்று காலமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கையசைத்து வழிகாட்டும் மை உதிர்த்த பேனா

- வெளியீடு: தமிழீழக் கலைஞர் ஒன்றியம் - பிரான்ஸ்

**15.12.1995.**

கணணி, அச்சுப்பதிப்பு: ஸ்ரீ பாரதி அச்சகம் - Tel: 42 05 46 04 - Fax: 42 05 46 36

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org